## பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை ரத்துச் செய்திருப்பதை

## சோபா மாடல் அரசு கைவிட்டு தமிழ்நாட்டின் வளர்ச்சி

# இளைஞர்களின் எதிர்காலம் கருதி பணிகளைத் தொடர வேண்டும்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை,ஆக.26-**

**பரந்தூர் விமான நிலைய திட்டம் ரத்து குறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:**



தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான பரந்தூர் விமான நிலையத்திட்டத்தை ரத்து செய்திருக்கும் Sofa Model அரசை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

சென்னையில் பெருகி வரும் விமானப் பயணிகளின் எண்ணிக்கை மற்றும் விமான சரக்கு போக்குவரத்து எதிர்காலத் தேவை போன்றவற்றின் அடிப்படையில், சென்னைக்கு 2ஆவது விமான நிலையம் அவசியம் என்பதை உணர்ந்து, பரந்தூர் விமான நிலையத் திட்டம் கழக அரசால் உருவாக்கப்பட்டது.

இத்திட்டத்திற்கு Airports Authority of India, Union Civil Aviation Ministry உள்ளிட்டவை ஆய்வு செய்து, அனுமதி தந்து விட்டன.

இத்தகைய கடினமான அனுமதிகளைப் பெறுவது, கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்குச் சந்தை மதிப்பை விட 3 மடங்கு அதிகமான இழப்பீடு, மறு குடியமர்வு போன்ற முக்கியமான பணிகள் அனைத்தும் கழகத்தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முதலமைச்சராக இருந்த போதே நடைபெற்றன.

இதற்காக அரசுத் தரப்பில் பெரும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவையெல்லாம் நடந்த பிறகு, அற்ப அரசியல் காரணங்களுக்காக திட்டத்தையே கைவிடுகிறேன் என்று சொன்னால், அது அரசிற்கு பெரும் நிதி இழப்பை ஏற்படுத்தும்.

பரந்தூர் விமான நிலையத் திட்டத்தை நிறுத்துவதால், சென்னையை சுற்றியுள்ள தொழில் நிறுவனங்கள் அண்டை மாநிலங்களை நோக்கி வெளியேறும் அபாயமும், புதிய நிறுவனங்கள் சென்னைக்கு வர தயங்கும் சூழலும் எழுந்துள்ளன.

ஆகவே, தமிழ்நாட்டு இளைஞர்களின் எதிர்காலத்தையும் தமிழ்நாட்டின் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, பரந்தூர் விமான நிலைய பணிகளைத் தொடர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். #ParandurAirport

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.

---

## மதுரை மீனாட்சி அம்மன் குடமுழுக்கு அழைப்பிதழில் 10 பிழைகள்!

# அழைப்பிதழை திருத்தி சட்ட விதிகளுக்கு உட்பட்டு குட முழுக்கு நடத்துக!

## முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேட்டி!

*சென்னை, ஆக. 26-*



வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோவில் திருக்குடமுழுக்கு அழைப்பிதழில் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட அறங்காவலர் குழு பெயர் இடம் பெறாதது குறித்தும், அந்த அழைப்பிதழில் பல பெயர்கள் தவறாக அச்சடிக்கப்பட்டதற்கும் சட்டமன்றத்தில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து அவையில் பேசி முடித்து செய்தியாளர்களை சந்தித்து பி.கே.சேகர்பாபு அளித்த பேட்டி வருமாறு:

வரலாற்று பெருமை மிக்க மதுரை மீனாட்சி அம்மன் திருக்கோயில் குடமுழுக்கு அழைப்பிதழில் திருமுகப்பாசுர என்பதற்கு உண்மையான சொற்றொடர் திருமுகப் பாசுரம், அவ்வமையம் என்பதற்கு உண்மையான சொற்றொடர் அவ்வமயம் என்பதுதான் சரியான சொற்றொடர் அதே போல் நீன்றசீர் நெடுமாறன் என்று இருக்கிறது.

ஆனால் சரியான சொற்றொடர் நின்ற சீர் நெடுமாறன் என்பது.

இதுபோல் பத்து பிழைகள் இருக்கின்றது அது மாத்திரம் இல்லாமல் இந்து சமய அறநிலைத்துறை கொடைகள் சட்டம் என்ன சொல்கிறது என்றால் சட்டப்பிரிவு 28 ன் படி உட்பிரிவு 6(22)ன் படி அனுமதி அளிக்கிறது.

**பாரம்பரிய குடும்பத்தின் பெயர் கூட அழைப்பிதழில் இல்லை!**

கொடைகளுடைய 1959 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்து சமய அறநிலைத்துறை கொடையின் சட்ட விதிகளிலே குறிப்பிட்டதையும் இந்த பத்திரிக்கையில் இடம் பெற்றிருக்கின்ற வாசகங்கள் மீறி இருக்கின்றது. அறங்காவலர் குழு தலைவராக இருப்பவர் தற்போது ருக்மணி பழனிவேல் அவர்கள்.

பாரம்பரியமிக்க அந்த குடும்பம் தான் 1974 ஆம் ஆண்டு அந்த திருக்கோயிலினுடைய திருக்குட முழுக்கு நடத்தியிருக்கின்றார்கள். ஏன் இன்னும் அதிகம் சொல்லப்போனால் தென் மாநிலங்கள் முழுவதும் இப்பொழுது பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கின்ற சரணம் ஐயப்பா சுவாமியினுடைய விக்கிரகத்தையே அன்றைக்கு வடிவமைத்து தந்தவர்கள் தான் அந்த குடும்பம் அவர்களுடைய பெயர் கூட இந்த திருக்குடமுழுக்கு அழைப்பிதழிலே இடம் பெறவில்லை.

**இறந்தவர் பெயரை அழைப்பிதழில் போடலாமா?**

இதையெல்லாம் காலையிலேயே சுட்டிக்காட்டி பேரவை தலைவருடைய கவனத்திற்கு கொண்டு வந்தேன்.அதற்கு உரிய பதில் முறையாக கிடைக்கப்பெறவில்லை. இதன் பிறகாவது இந்த அழைப்பிதழை முறைப்படுத்தி 10 இடத்தில் பிழையாக இருக்கின்ற சொற்றொடரை மாற்ற வேண்டும். அதோடு மட்டுமில்லாமல் இறந்து போன தம்பிரான் அவர்களுடைய பெயரும் இந்த அழைப்பிதழிலே இடம்பெற்றிருக்கிறது. இறந்தவருக்கும் இந்த அழைப்பிதழில் உயிர் கொடுத்திருக்கிறார்கள். அதுமாத்திரமல்ல மதுரை திருஞானசம்பந்தர் உடைய மடம்தான் இந்த திருக்கோயிலுனுடைய அனைத்து பணிகளையும் முழுமையாக மேற்கொண்ட மடம். அவருடைய பெயர் கூட இதில் முன்னிலைப்படுத்தப்பபடவில்லை இதையெல்லாம் காலையிலேயே எடுத்துச் சொல்லி இருக்கின்றோம், பேரவை தலைவருக்கும் அவையினுடைய கவனத்தையும் ஈர்த்திருக்கின்றோம் .இது குறித்து இதன் பிறகாவது வேறு பத்திரிகை அடித்து முறையாக குடமுழுக்கு நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்னாள் இந்து சமய அறநிலையத்துறை தலைவர் என்ற வகையில் நான் கோரிக்கை வைக்கின்றேன்.

**ஆட்சியாளர்களின் தூக்கத்தைக் கெடுக்கும் ஐ.டி.விங்!**

மற்றும் ஒரு கேள்வி மானிய கோரிக்கை அறிவிப்பிலேயே இந்து சமய அறநிலையத்துறை அறிவிப்பில் அம்மை பார்த்தவர் தங்கும் மண்டபம் என்று ஒரு அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.அது அவர்களுடைய முகநூல் பதிவு அரசினுடைய முகநூல் பதிவிலேயே அம்மை வார்த்தவர்கள் தங்குமிடம் அரங்கநாதன் திருக்கோயில் உப கோயிலான அன்பில் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் அம்மை வார்த்தைவர்கள் தங்குமிடம் என்றுள்ளது. அம்மை வார்த்தவர்கள் குணமடைந்து வந்து தங்கி நேர்த்திக்கடன் செலுத்தும் மண்டபம் தான் என்று அறிவித்திருந்தோம்.

ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஐடி விங்கை சார்ந்தவர்கள் இரவு 12 மணி முதல் 2 மணி வரை இதை திரித்து கூறியுள்ளார்கள் என்றார். திராவிட முன்னேற்ற கழகம் அவருடைய தூக்கத்தை தொலைக்கிறது என்பதை அந்த செய்தியினுடைய தாக்கத்திலிருந்து தெரிகிறது. ஆனால் உண்மை என்னவென்றால் அவர் அறிவித்த அறிவிப்பின் நகல் தான் இது. இப்படி உண்மைக்கு புறம்பாக உண்மைக்கு ஒவ்வாத வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்ற கூற்றை தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகின்ற அவருடைய செயல்பாட்டை கண்டிக்கின்றோம் தவறுகள் என்பது ஒரு சில நேரத்திலே தவறி செய்யக்கூடியதுதான் அதில் உண்மை இருக்கிறது என்ற பட்சத்தில் அதை ஒப்புக்கொண்டு திருத்திக் கொள்ள வேண்டும் அதுதான் மனித இயல்பு தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் தான் என்று வாதிடுவது சரியில்ல.

**அறங்காவலர் குழுத் தலைவர் பெயர் இடம் பெற வேண்டும்!**

ஆகவே இந்த குட முழுக்கு அழைப்பிதழை திருத்தி முறையாக அழைப்பிதழில் அறங்காவலர் குழு தலைவர் உட்பட அனைவருடைய பெயரும் இடம் பெற வேண்டும். எழுத்து சொற்றொடரில் இருக்கின்ற பிழைகள் அகற்றப்பட வேண்டும். மதுரை ஆதினத்தின் பெயர் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும், சட்ட விதிகளுக்கு உட்பட்டு இந்த குடமுழுக்கு நடத்த வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. அறங்காவலர் குழு நியமனத்தை பற்றி கேட்கிறீர்கள்

சில ஊடகங்களில் வருகின்ற பதிவுகளை எல்லாம் பார்த்தால் அரசியலுக்கு யாருமே வரக்கூடாது என்றளவில் தான் ஒரு மாபியா கும்பல் அதற்கு வேலை செய்து கொண்டிருக்கிறது அதற்குத்தான் நாங்கள் ஒரு பெயரை வைத்து இருக்கின்றோம் ரூட் மாபியா என்று அரசியலுக்கு வருகின்ற பெண்களை முதற்கொண்டு குடும்ப பெண்கள் முதற்கொண்டு இழிவாக தவறாக பேசுவது தான் வழக்கமாக கொண்டிருப்பவர்கள். அந்த அடிப்படையில் தான் உண்மைக்கு மாறான கருத்துக்களை பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்தது போல இன்றைக்கு அவர்களுடைய முகநூல் இன்ஸ்டாகிராம் பதிவுகள் தொடர்கின்றது. நீங்கள் சொல்வது போல் அப்படி எந்த தகவலும் இல்லை.யாரும் கடந்த காலங்களில் நாங்கள் நியமித்த அறங்காவலர்களுடைய பட்டியலை படித்தாலே உங்களுக்கு தெரியும்.

**தகுதியானவர்களை நாங்கள் நியமித்தோம்!**

மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலை எடுத்துக் கொண்டால் அப்போலோ மருத்துவமனையுடைய ஓனர் தான் அதனுடைய அறங்காவலர் குழுத் தலைவர், வடபழனி முருகன் கோவிலை எடுத்துக் கொண்டால் நம்முடைய தினமலருடைய மேன்மை தாங்கிய ஆதிமூலம் தான் அதற்கு தக்கார். அதேபோல் கள்ளழகர் கோவில் அறங்காவலர் குழுவை எடுத்துக் கொண்டால் அதற்கு வெங்கடேஸ்வரா கல்லூரி உரிமையாளர் வெங்கடாஜலம் தான் அதற்கு தலைவர் நம்முடைய மதுரை மீனாட்சியம்மன் திருக்கோவிலை எடுத்துக் கொண்டால் பாராம்பரிய வம்சத்தை சார்ந்த நீதிமன்ற உத்தரவு படி நீதிமன்ற தீர்ப்பு பெறப்பட்டு தலைவராக ஆனவர் தான் ருக்மணி பழனிவேல் இப்படி அனைத்து இடங்களிலும் தகுதியான உறுப்பினர் தான் நியமத்திரு க்கின்றோம் ஏற்கனவே நம்முடைய உயர் நீதிமன்ற நீதி அரசராக இருந்த திரு. மகாதேவன் தலைமையிலே கொண்ட குழு அளித்த வழி காட்டுதல் படி தான் அனைத்து கோவில்களுடைய அறங்காவலர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. குறிப்பிட்டார்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் கடம்பத்தூர் மத்திய ஒன்றியம் செஞ்சி கிளை பிரதிநிதி ஸ்ரீதர் – ரம்யா இல்ல விழா நடைபெற்றது இதில் முன்னாள் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் தலைமை செயற்குழு உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், கலந்துகொண்டு வாழ்த்தினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் பிரகாஷ்ஞானஒளி, மோ.ரமேஷ், நிர்வாகிகள் சேகர், பெருமாள், ஆனந்த், வாசு, பிரியாங்குப்பம் டி.ராஜன், முனுசாமி, மணி, பலராமன், டேவிட், கிரிதரன், கஜேந்திரன், லட்சுமணன், நடராஜ், குமார், சுகுமார், பிரவீன், காட்வின் உள்பட பலர் உள்ளனர்.

---

# கழக அரசின் 100 நாள் சாதனைகளும் விஜய் அரசின் 100 நாள் காட்சியும் !

2021-ல் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் மே 7-ம் தேதி பொறுப்பேற்ற 100 நாள் ஆட்சி என்ன செய்தது, 2026-ல் விஜய் அவர்களின் 100 நாள் ஆட்சி என்ன செய்கிறது என்று பாருங்கள். உண்மை உங்கள் கண் முன்னே!

**முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் - சொன்னதை செய்தவர்:**

முதல் நாள் 5 கையெழுத்து - 5-ம் சாதனை!

1. கொரோனா நிவாரண நிதி ரூ.4000 - 2.10 கோடி குடும்பங்களுக்கு இரண்டு தவணையாக வழங்கினார்.

2. ஆவின் பால் விலை லிட்டருக்கு ரூ.3 குறைத்தார்.

3. மகளிருக்கு அரசு நகரப் பேருந்துகளில் கட்டணமில்லா பயணம் - இன்று வரை 500 கோடி பயணங்களை தாண்டி சாதனை.

4. முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டை விரிவாக்கம் செய்தார்.

5. தனியார் மருத்துவமனையில் கொரோனா சிகிச்சை கட்டணத்தை அரசே ஏற்றது.

**100 நாட்களில்:**

6. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை - பிரச்சாரத்தில் பெற்ற 4.57 லட்சம் மனுக்களில் 2.30 லட்சம் மனுக்களுக்கு 100 நாட்களிலேயே தீர்வு.

7. பெட்ரோல் விலை ரூ.3 குறைப்பு.

8. மக்களை தேடி மருத்துவம் திட்டம் கிருஷ்ணகிரியில் தொடக்கம்.

9. அரசுப்பள்ளி மாணவர்களுக்கு பொறியியல், வேளாண்மையில் 7.5% இட ஒதுக்கீடு.

10. 14 மளிகை பொருட்கள் அடங்கிய நிவாரண தொகுப்பு.

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் சொன்னார்: செய்தார்.

**விஜய் - சொன்னதை செய்தாரா??**

1. 6 சிலிண்டர் என்றவர் 3 ஆக்கினார்: எல்லா பெண்களுக்கும் என்றவர், இப்போது ஆண்டுக்கு ரூ.2.5 லட்சம் வருமானத்திற்கு கீழ் உள்ளவர்களுக்கு மட்டும். திட்டத்தில் 50% வெட்டு.

2. 200 யூனிட் இலவசம் என்றவர் நிபந்தனை வைத்தார்: 500 யூனிட்டுக்கு கீழ் பயன்படுத்தினால் மட்டும் 200 யூனிட் இலவசம். மேல் பயன்படுத்தினால் பழைய 100 யூனிட் தான். 2.30 கோடி இணைப்புகளில் பல லட்சம் பேருக்கு ஏமாற்றம்.

3. 5 ஏக்கர் வரை கடன் தள்ளுபடி என்றவர் தொகைக்கு வரம்பு வைத்தார்: லட்சக்கணக்கான விவசாயிகள் ஏமாற்றம்.

1. தங்க மோதிரம் - மிகப்பெரிய ஏமாற்று:

"பிறக்கும் எல்லா குழந்தைக்கும் தங்க மோதிரம்" என்றார். இப்போது "அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைக்கு மட்டும் தான்" என்று மாற்றிவிட்டார். தமிழகத்தில் பிறக்கும் 10 லட்சம் குழந்தைகளில் 55% தனியார் மருத்துவமனையில் பிறக்கிறார்கள். அவர்களை கழித்து விட்டார். இது அரைகுறை அல்ல, முழு ஏமாற்று!



**சைதை சாதிக்**
(கழக செய்தி தொடர்பாளர்)

2. தங்கம் + பட்டுப்புடவை - விதிமுறைகளின் மலை:

"திருமணமாகும் எல்லா பெண்களுக்கும் 1 சவரன் தங்கம் + பட்டுப்புடவை" என்றார். இப்போது ஏகப்பட்ட விதிமுறைகள்:

- வருமான வரம்பு ரூ.2.5 லட்சத்திற்குள்
- பிறப்பிட சான்று கட்டாயம்
- திருமண சான்று கட்டாயம்
- 10-க்கும் மேற்பட்ட ஆவணங்கள்

ஆண்டுக்கு 6 லட்சம் பெண்களில் 4 லட்சம் பேருக்கு மறுப்பு. பயனாளிகள் 70% கடுமையாக குறைப்பு!

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் 100 நாள் - சாதனைக்கு சாட்சி!

விஜய் 100 நாள் - அரைகுறை ஆட்சிக்கு சாட்சி!

வாக்குறுதியில் "எல்லோருக்கும்" என்று சொல்லி ஓட்டு வாங்கி, நடைமுறையில் "தகுதியுள்ளவர்களுக்கு மட்டும்" என்று ஏமாற்றுவது தான் விஜய் ஆட்சி!

வாக்குறுதி கொடுத்து ஓட்டு வாங்குவது அரசியல், சொன்னதை செய்வதுதான் ஆட்சி - அதை முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் செய்து காட்டினார்!

---

# ஓசூருமில்லை, பரந்தூரையும் இழந்தால் நம் தொழில் வளர்ச்சி எங்கே போகும்?

## முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி! 3ஆம் பக்கத் தொடர்ச்சி...

இந்தச் சூழ்நிலையில், பரந்தூரிலேயே விமான நிலையத்தை அமைப்பதுதான் மிகச் சரியான முடிவாக இருக்கும். ஆனால், இதை நீங்கள் அரசியல் காரணங்களுக்காக இன்றைக்கு மாற்றுகிறீர்கள் என்ற எண்ணம் ஏற்படுகிறது.

ஒரு திட்டம் நாட்டிற்கு வரும் போது, அதில் அரசியல் செய்யக் கூடாது. அரசியல் காரணங்களுக்காக ஏதேனும் திட்டங்கள் நிறுத்தப்படு கின்றன என்றால், அது நம்முடைய பொருளாதாரத்தையே பாதிக்கும். ஏற்கனவே அதிமுக ஆட்சியில், துறைமுகத்திலிருந்து மதுரவாயல் வரையிலான திட்டம் அரசியல் காரணங்களுக்காக நிறுத்தப் பட்டது. மீண்டும் நம்முடைய கழக ஆட்சியில்தான் அந்தத் திட்டம் தொடங்கப்பட்டது. இதுபோன்று பல்வேறு சூழ்நிலைகளில் அரசியல் காரணங்களுக்காக திட்டங்களை நிறுத்தினால், அது ஒட்டு மொத்த நாட்டினுடைய பொருளாதாரத்தையும் பாதிக்கும்.

எனவேதான் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது என்னவென்றால், அரசு அரசியல் நோக்கங்களைக் கடந்து சிந்திக்க வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கொண்டுவரப்பட்ட இந்தத் திட்டத்தில், இன்றைக்கு நிலம் கையகப்படுத்தும் பணிகள்கூட ஏறத்தாழ 90 சதவீதம் முடிந்துவிட்ட நிலையில், தேர்தல் அறிக்கையில் சொல்லிவிட்டோம், விக்கிரவாண்டியில் சொல்லிவிட்டோம் என்ற காரணங்களை மட்டும் முன்வைத்து இந்தத் திட்டத்தை நிராகரிப்பது, அப்பகுதியின் பொருளாதார வளர்ச்சியை மிகப்பெரிய அளவில் பாதிக்கும்.

**ஆந்திராவை நோக்கிச் செல்லும் தொழிற்சாலைகள்!**

ஸ்ரீபெரும்புதூர் மட்டுமல்ல; நம்முடைய பகுதிகளைச் சுற்றிப் பார்த்தீர்கள் என்றால், பல்வேறு தொழிற்சாலைகள் ஆந்திராவை நோக்கிச் செல்லக்கூடிய சூழ்நிலைகளும் உருவாகியிருக்கின்றன. ஆந்திர அரசும் ஏற்கனவே அங்கே ஒரு விமான நிலையம் அமைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. ஏற்கனவேஓசூர்விமானநிலையத்தையும் நாம் இழந்திருக்கிறோம். பெங்களூருவில் இப்போது இரண்டாவது விமான நிலையத்திற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. ஆந்திராவின் குப்பம் பகுதியிலும் விமான நிலையம் வருவதற்கான நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

சுற்றியுள்ள மாநிலங்கள் எல்லாம் விமான நிலையங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்ற நிலையில், ஓசூரில் நமக்கு அனுமதி மறுக்கப்பட்டதால் அந்த வாய்ப்பையும் நாம் இழக்கிறோம். இப்போது மீண்டும் பரந்தூரையும் இழந்துவிட்டால், தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சி எங்கே போகும்? நம்முடைய பொருளாதார இலக்கு எங்கே போகும்?

அரசு அறிவித்திருக்கக்கூடிய 1.5 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார இலக்கை இந்த அரசு எப்படி நிறைவேற்றப் போகிறது? அதற்கான ரோட்மேப் என்ன?

ஆகவே, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும், தொழில் முன்னேற்றத்திற்கும் அடித்தளமாக அமையக் கூடிய இதுபோன்ற முக்கியமான திட்டங்களை அரசியல் காரணங்களுக்காகத் தடுத்து நிறுத்தும் போக்கைக் கைவிட வேண்டும். இல்லையென்றால், தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் அதன் முன்னேற்றத்திற்கும் இந்த அரசு துணை நிற்கவில்லை என்பதையே இது வெளிப்படுத்தும்

இவ்வாறு தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. குறிப்பிட்டார்.